1996 மார்ச் 1]

**மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாடகத்தின் மூலம் பரப்பப்படுகின்ற வசனங்கள், கதைகள், பாடல்கள் பிரச்சினைகளை உருவாக்குகின்ற காரணத்தால் கிராமங்களிடத்திலே சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கு சுட்டிக்காட்டினார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்துவிடக்கூடாது என்பதற்காக அரசு இதிலே இப்படிப்பட்ட நிலையை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 175, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**175—**

ஓசூர் தொகுதியில் குடிநீர்த் திட்டம்

*26716—திரு. கே.ஏ. மனோகரன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குடிசாதனள்ளி கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நடப்பு ஆண்டில் திட்டம் ஏதுமில்லை. இக்கிராமத்திற்கு இனிவரும் ஆண்டுகளில் அதன் முன்னுரிமைப்படியும், வாரிய விதிகளின்படியும் நிதிநிலைக்கேற்ப திட்டம் செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கிராமம் மிகப் பெரிய கிராமம். அதிலே மேட்டுப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே நீர்நிலை ஆதாரங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகப் போடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளும் பயனில்லாத காரணத்தினாலே அதற்கு ஒரு

ஒப்பன் வெல் வெட்டி அந்த குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குடிசாதனள்ளி 950 மக்கள் தொகை கொண்ட குடிநீர் பிரச்சினை இருக்கிற கிராமம். அந்தப் பகுதியில் 1977-78 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒரு கையிறைப்பான் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் 1982-83 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் ஒரு கையிறைப்பானும், 1989-90 ஆம் ஆண்டில் முடுக்கிவிடப்பட்ட திட்டத்தின் கீழ் ஒரு கையிறைப்பானும் அமைக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. குடிசாதனள்ளி கிராமத்தின் ஒவ்வொரு குடியிருப்புக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 16 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1995-96-ம் நிதி ஆண்டில் 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வழங்கும் குடியிருப்புகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதால் இனி வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் வாரிய விதிகளின்படி இந்த கிராமத்திற்கு நிதிநிலைமைக்கு ஏற்ப திட்டம் செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்176, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**176—**

## திருப்பூரைத் தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்தல்

*33827—திரு. சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார்கோவில் ஒன்றியம், திருப்பூர் இரு வேறு பஞ்சாயத்துக்களில் இருப்பதால் திருப்பூரைத் தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்து செயல்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.